Dhinathdhalam@gmail.com

www.dhinathdhalam.com

விளம்பரதாரர்கள் தேவை

தமிழகம் முழுவதும் 234 சட்டமன்ற தொகுதிகளுக்கும் செய்தி – விளம்பரம் சேகரிக்க முழு நேர – பகுதி நேர பணிக்கு தகுந்த ஆட்கள் தேவை.

☎ 9 111 222 654

தினத்தளம்

PRGI NO: TNBIL/25/A3556

நடுநிலை நாளிதழ்

DHINATH DHALAM Tamil & English daily Paper

செய்தியாளர்கள் தேவை

தமிழகம் முழுவதும் மாவட்டம் & தாலுகா வாரியாக சந்தாதாரர் அடிப்படையில் ஆண்/பெண் நிருபர்கள் தேவை

☎ 94440 82959

ஆசிரியர் : முனைவர். எஸ்.மோகன்ராஜ் M.A.,PGDJMC.,Ph.D., நிர்வாக ஆசிரியர் : முனைவர். எம்.ஹரிகிருஷ்ணன் B.A.,

மலர் Volume : 01 | இதழ் Issue : 006 | திங்கள் Monday | 06.04.2026 | பக்கங்கள் Pages:4 | ₹ 6 | ஈரோடு Erode

மீனவர்களுக்கு ஓய்வூதியம் அளிக்கப்படும்

முதலமைச்சர் ஸ்டாலின் தேர்தல் பிரச்சாரத்தில் வாக்குறுதி

நாகர்கோயில்: "சூழ்ந்திருக்கும் ஆபத்தில் இருந்து தமிழ்நாட்டைக் காக்க திமுக ஆட்சிதான் தொடரவேண்டும்.இஸ்லாமியர்களுக்கு துரோகம் செய்ததைப் போல், FCRA-வில் கிறிஸ்தவ மக்களுக்கும் துரோகம் செய்ய பழனிசாமி தயாராகிவிட்டாரா?" என முதல்வர் ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

நாகர்கோவிலில் நடைபெற்ற சட்டப் பேரவைத் தேர்தல் பரப்புரைப் பொதுக்கூட்டத்தில் மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணி வேட்பாளர்களை ஆதரித்து முதல்வர் ஸ்டாலின் பேசினார். அப்போது அவர், "இன்றைக்குக் காலையில் மீனவ கிராமங்களுக்குச் சென்று மக்களைச் சந்தித்தபோது, என்னிடம் சில கோரிக்கைகளை உரிமையோடு வைத்தார்கள். கழக மீனவரணிச் செயலாளர் சகோதரர்ஜோசப்ஸ்டாலினும் என்னிடம் சில கோரிக்கைகளைச் சொன்னார். அதன் அடிப்படையில் சில புதிய வாக்குறுதிகளையும், மீனவர்க மீ தமிழ்நாட்டைச் சேர்ந்த மீனவர்களை இந்திய மீனவர்களாக நினைத்து பாஜக அரசு அக்கறை செலுத்தவில்லை என்பதுதான் வருத்தத்திற்குரியது.அதன்விளைவுதான் நம்முடைய மீனவர்கள் மேல் இலங்கைக் கடற்படை நடத்தும் தொடர் தாக்குதல்கள். காங்கிரஸ் ஆட்சிக் காலத்தில் பிரதமர் மோடி என்ன சொன்னார், "மன்மோகன் சிங் என்ற பலவீனமான பிரதமர் ஆள்வதால்தான்நம்மீனவர்கள் மீது தாக்குதல் நடக்கிறது. பலமான பிரதமர் நான் வந்தால் நடக்காது" என்று பேசினார். இப்போது நடக்கிறதா? இல்லையா? நடந்து கொண்டிருக்கிறது. இப்போது, தான் ஒரு பலவீனமான பிரதமர் என்பதை மோடி ஏற்றுக்கொள்வாரா? ஏற்றுக்கொள்ள மாட்டாரா? னவர் நல வாரியத்தில் உறுப்பினர் சேர்க்கைக்கான வயது வரம்பு 65-இல் இருந்து 70 வயதாக உயர்த்தப்படும். மீனவர் நல வாரியத்தில் உறுப்பினராக இருப்பவர்களுக்கு, இப்போது வழங்கப்பட்டு வரும் நலத்திட்டங்களோடு, கூடுதலாக அவர்களின் 70 வயது முதல் 75 வயது வரை மாதம்தோறும் ஓய்வூதியம்வழங்கப்படும்என்று மகிழ்ச்சியோடு நான் தெரிவித்துக் கொள்கிறேன். இப்படி மீனவர்களின் உண்மையான நண்பனாக – உற்ற தோழனாகச் செயல்பட்டு வருகிறது திராவிட மாடல் அரசு.

ஆனால், வெளியுறவுக் கொள்கையைக் கையில் வைத்திருக்கும் ஒன்றிய பாஜக அரசு,கடல் கடந்து மீன்பிடிக்கச் செல்லும் நம்முடைய மீனவர்களைக் காக்கத் தவறிவிட்டது. தவறியது மட்டுமல்ல; வெளியுறவுக் கொள்கையில் தோல்வி அடைந்திருக்கிறது. சிறிய அண்டை நாடுகளிடம்கூட இந்தியாவிற்குச் செல்வாக்கு இல்லாத நிலையைப் பிரதமர் மோடி உருவாக்கி இருக்கிறார்.

இந்தக் கேள்வி மட்டுமா இருக்கிறது. இன்னும் கேள்விகள் அடுக்கடுக்காக இருக்கிறது. மதுரை எய்ம்ஸ் என்ன என்று தெரியும் உங்களுக்கு. கோவை, மதுரை மெட்ரோ ரயில், ஒசூர் விமான நிலையம், பேரிடர் நிவாரண நிதி, பள்ளிக் கல்வி நிதி, கீழடி ஆய்வறிக்கை, தொகுதி மறுவரையறையில் உரிய நியாயம், நிதிப் பகிர்வில் தமிழ்நாட்டிற்குரிய பங்கு, தமிழ்நாட்டிற்கு மறுக்கப்படும் புதிய ரயில்வே திட்டங்கள்... இப்படி,தமிழ்நாட்டின் சார்பில் பிரதமர் மோடி அவர்களைக் கேட்க ஏராளமான கேள்விகள் இருக்கின்றன. இதெல்லாம், நான் தொடர்ச்சியாகக் கேட்கும் கேள்விகள்.இதெற்கெல்லாம் பதில் இருக்கிறதா? இல்லை. புதிதாக ஒரு பிரச்சினை கிளம்பியிருக்கிறது! என்ன தெரியுமா? சிறுபான்மையின மக்களை, குறிப்பாக கிறிஸ்தவத் தொண்டு நிறுவனங்களைக் குறிவைத்துக் கொண்டு வரப்பட்டிருக்கும் வெளிநாட்டு நிதி பங்களிப்பு சட்டத் திருத்தம். அதாவது, FCRA மசோதா. இதற்காகவும் தமிழ்நாட்டில் இந்த ஸ்டாலின்தான் முதல் குரல் கொடுத்திருக்கிறேன். இரண்டு நாள் முன்பே, இதைக் கண்டித்து அறிக்கை வெளியிட்டிருக்கிறேன். முழுமையாகத் திரும்பப் பெற வேண்டும் என்று வலியுறுத்திச் சொல்லியிருக்கிறேன். நேற்று, மீண்டும் பிரதமர் அவர்களுக்கு அரசின் சார்பில் விளக்கமாகநான் கடிதம் எழுதியிருக்கிறேன்.

இந்தச் சட்டத் திருத்தத்தால் இந்தியா முழுவதும் கிறிஸ்தவச் சமுதாய மக்கள் கொதித்துப் போயிருக்கிறார்கள். சான்றுகளைச் சமர்ப்பிப்பதில் சிறிய தாமதம் உள்ளிட்ட பிற காரணங்களைச் சுட்டிக் காட்டி, ஒரு அமைப்பின் அங்கீகாரத்தை ரத்து செய்து, அவர்களிடம் இருக்கும் நிதியையும், சொத்தையும் பறித்துக் கொள்ள இந்தகொடுங்கோல்சட்டம் வழிவகுக்கிறது. சொத்து என்றால், மக்களுக்குச் சேவையாற்றும் மருத்துவமனைகள், பள்ளிக்கூடங்கள், விடுதிகள் இவைதான்.

இன்னும் கொடுமை என்னவென்றால், பாதி நிதியை வெளிநாட்டில் இருந்து பெற்று, மீதியை உள்நாட்டில் இருந்து பெற்று உருவாக்கிய சொத்துகளைக் கூட, இந்தச் சட்டம் வந்தால் முடக்கிவிட முடியும். பிரதமர் மோடி அவர்கள் கண்துடைப்புக்காக, பல கிறிஸ்தவ அமைப்புகளின் நிகழ்ச்சிகளில் கலந்துகொண்டு, ஏழைகளின் கல்விக்காகவும் – மருத்துவத்துக்காகவும் அவர்கள் செய்யும் செயல்களை எல்லாம் பாராட்டிப் பேசியிருக்கிறார். ஆனால், இப்போது என்ன செய்கிறார்? இதுதான், அவரது உண்மையான முகம்.

இப்போது திடீர் என்று இப்படி ஒரு தன்னிச்சையானகொடுங்கோல்சட்டத்தை கொண்டு வந்தால், குறிப்பாக, பட்டியலின மக்கள், பழங்குடியின மக்கள், கிராமப்புற ஏழைகள்தான் அதிகம் பாதிக்கப்படுவார்கள். நிதி தருவதற்கு முன்வருபவர்களையும் அச்சுறுத்துவது மாதிரியான பிரிவுகள் இந்தச் சட்டத் திருத்தத்தில் கொண்டு வந்திருக்கிறார்கள். ந்தியா முழுவதும் ஆயிரக்கணக்கான கிறிஸ்தவ கல்வி,மருத்துவஅமைப்புகள் இயங்கி வருகின்றன. அவையெல்லாம் இல்லாமல் போனால், அரசால் அவர்கள் செய்துவரும்சேவையை, உடனே இட்டு நிரப்ப முடியாது என்பதையும் என்னுடைய கடிதத்தில் நான் சுட்டிக் காட்டியிருக்கிறேன். மொத்தத்தில்,இந்தச்சட்டத்திருத்தம்,மதசுதந்திரம்மற்றும் சமூக சேவை செய்ய விரும்பும் மக்கள் மீதான கடுமையான தாக்குதல். அரசியலமைப்பு வழங்கும் உரிமைகளைப் பறிக்கும் செயல்.

கிறிஸ்தவ மக்கள் அதிகம்வாழும்–தேவாலயங்கள் அதிகம்இருக்கும், கேரளம், அசாம் மாநிலங்களில் தேர்தல் நடக்க இருக்கும் காரணத்தினால், இப்போதைக்கு பயந்து போய் பாஜக அரசு சற்று பின்வாங்கி இருக்கிறது. ஆனால், கூடிய விரைவில் சிறப்புக் கூட்டத்தொடர் கூட்டி, இந்த மசோதாவை நிறைவேற்றிச் சட்டம் ஆக்குவதுதான் பாஜக அரசின் சதித் திட்டம். கிறிஸ்தவத் தொண்டு நிறுவனங்களால் இந்துக்களும்தான் அதிகம் பயனடைகிறார்கள். மதவெறிப் பார்வையுடன் மனிதநேயச் செயல்பாடுகள் மேல் தொடுக்கும் இந்தத் தாக்குதல், ஒரு மதத்திற்கு எதிரானது மட்டுமல்ல, இது மனிதகுலத்திற்கே எதிரானது. இந்தியா மேல் உலக அளவில் அழிக்க முடியாத களங்கத்தை இந்தச் சட்டம் ஏற்படுத்தும் ஆபத்து இருக்கிறது. நாடாளுமன்றமேமுடங்கும் அளவிற்கு எதிர்க்கட்சி உறுப்பினர்கள் இதைஎதிர்த்துப்பேசியிருக்கிறார்கள்.

தமிழக பா.ஜ.க நிர்வாகிகளுடன் பிரதமர் மோடி முக்கிய ஆலோசனை

சென்னை:தமிழகசட்டமன்றத் தேர்தலை முன்னிட்டு பிரதமர் நரேந்திர மோடி தலைமையில் தமிழ்நாடு பாஜக நிர்வாகிகள், தேர்தல் பொறுப்பாளர்கள், மேலிட பார்வையாளர்கள் பங்கேற்ற உயர்மட்டக்குழுக்கூட்டம்சென்னையில்நடைபெற்றது.

தேர்தல் பிரச்சாரம் உள்ளிட்ட கட்சி சார்ந்த நிகழ்ச்சிகளில்பங்கேற்பதற்காக இரண்டு நாள் பயணமாக பிரதமர் நரேந்திர மோடி, நேற்று (ஏப்.3) நண்பகல் சென்னை வந்தார். பின்னர்புதுச்சேரியில்ரோடு ஷோ சென்ற பிரதமர், அங்கு நடைபெற்ற தேசிய ஜனநாயகக் கூட்டணியின் தேர்தல் பிரச்சாரப் பொதுக்கூட்டத்தில் கலந்து கொண்டார்.அதைத் தொடர்ந்து, தேசிய ஜனநாயகக் கூட்டணி கட்சிகளின் சார்பில் போட்டியிடும் வேட்பாளர்களை ஆதரித்து அவர் பிரச்சாரம் மேற்கொண்டார். பின்னர், புதுச்சேரி பயணத்தை முடித்துக் கொண்டு மீண்டும் சென்னைதிரும்பியபிரதமர் நரேந்திர மோடி, கிண்டியில் உள்ள நட்சத்திர விடுதியில் நேற்றிரவு தங்கினார். அதன் தொடர்ச்சியாக, இன்று (ஏப்ரல் 04) நட்சத்திர விடுதியில் பிரதமர் நரேந்திர மோடி தலைமையில் பாஜகவின் உயர்மட்டக் குழு மற்றும் மையக்குழு கூட்டம் நடைபெற்றது.

இந்த கூட்டத்தில் பாஜகவின் தமிழ்நாடு தேர்தல் பொறுப்பாளரும், மத்திய அமைச்சருமான பியூஸ் கோயல், பாஜக மாநில தலைவர் நயினார் நாகேந்திரன், முன்னாள் ஆளுநர் தமிழிசை சௌந்தரராஜன், பாஜகவின் முன்னாள் தலைவர் அண்ணாமலை, மத்திய அமைச்சர் எல்.முருகன், பாஜகவின் தேசிய மகளிரணிதலைவர்வானதி ஸ்ரீனிவாசன், கட்சியின் மேலிட பார்வையாளர்கள் அரவிந்த் மேனன், சுதாகர் ரெட்டி உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

தமிழ்நாடு சட்டமன்றத் தேர்தல் பணிகள், தேர்தல் வியூகம் உள்ளிட்டவை குறித்து பிரதமர், நிர்வாகிகளுடன் ஆலோசனை நடத்தினார். அத்துடன் வரும் ஏப்ரல் 15- ஆம் தேதி கன்னியாகுமரியில் நடைபெற உள்ள பிரச்சார பொதுக்கூட்டம் குறித்தும் ஆலோசிக்கப்பட்டதாகவும் தகவல்வெளியாகியுள்ளது. சுமார் ஒன்றரை மணிநேரம் ஆலோசனைக்கு பிறகு பிரதமர் நரேந்திர மோடி, சென்னையில் இருந்து தனி விமானம்மூலம்கேரளா சென்றடைந்தார். அங்கு தேசிய ஜனநாயகக் கட்சியின் சார்பில் நடைபெறவுள்ள தேர்தல் பிரச்சாரப் பொதுக்கூட்டத்தில்கலந்துகொள்கிறார். இதனிடையே, சட்டமன்றத் தேர்தலில் போட்டியிடாத அண்ணாமலைக்கு, தேசிய அளவில் கட்சியில் முக்கிய பொறுப்பு வழங்குவது குறித்து பாஜக மேலிடம் ஆலோசனை நடத்தி வருவதாக தகவல் வெளியாகியுள்ளது.

வரி விளம்பரங்கள்

தினத்தளம்
DHINATH DHALAM

மணமாலை	கோவில் திருவிழா	அரசியல் நிகழ்வுகள்
கல்வி	திருமண நாள்	பிறந்த நாள்	ஆண்டு விழா
திறப்பு விழா	வீட்டு சுப நிகழ்ச்சிகள்	நினைவு நாள்
ரியல் எஸ்டேட்	பைனான்ஸ்	நகைக்கடன்
வேலை வாய்ப்பு	ஆட்டோமொபைல்	

தொடர்புக்கு : ☎ +919444082959

இந்தியாவுக்கு கூடுதல் கச்சா எண்ணெய் மற்றும் எரிவாயுவை விநியோகிக்கத் தயார்: ரஷ்ய அரசு அறிவிப்பு

டெல்லி: இந்தியாவுக்கு கூடுதல் கச்சா எண்ணெய் மற்றும் எரிவாயுவை விநியோகிக்கத் தயாராகஉள்ளதாகரஷ்ய அரசு அறிவித்துள்ளது. இந்திய வெளியுறவுத் துறை அமைச்சர் ஜெய்சங்கர், ரஷ்யத் துணை பிரதமர் மான்ட்ரூவ் இடையேயான சந்திப்பின்போது மத்திய கிழக்கு போர் விவகாரம் குறித்தும், சிவில் அணுசக்தித் துறையில் இந்தியா – ரஷ்யா ஒத்துழைப்பை மேம்படுத்து குறித்து ஆலோசனை நடத்தப்பட்டது. ஈரான் – அமெரிக்கா இடையேயான மோதல் ஒரு மாதத்திற்கும் மேலாக நீடித்து வருகிறது.போர் நிறுத்தம் ஏற்படும் என்று எதிர்பார்க்கப்பட்ட நிலையில், அடுத்த இரண்டு வாரங்களுக்கு கடுமையான தாக்குதல் நடத்தப்படும் என்று அமெரிக்கா எச்சரித்துள்ளது. இதற்கு பதிலடியாக ஈரானும் வளைகுடாவில் உள்ள அமெரிக்க ராணுவ தளங்கள் மற்றும் எண்ணெய் வயல்கள் மீது தாக்குதல் நடத்தி வருகிறது. போரினால் ஹார்மூஸ் ஜலசந்தியில் போக்குவரத்து முடங்கியுள்ளது. இதனால் கச்சா எண்ணெய் விலை கடுமையாக உயர்ந்துள்ளது. விநியோகமும் பாதிக்கப்பட்டுள்ளது. கச்சா எண்ணெய் விலை உயர்வால், இந்திய மக்கள் பாதிக்கப்படாமல் இருப்பதற்குத் தேவையான நடவடிக்கைகளை ஒன்றிய அரசு எடுத்து வருகிறது. இதன் ஒரு பகுதியாக,ரஷ்யாவிடம் இருந்து கூடுதலாக கச்சா எண்ணெய், எரிவாயு வாங்கும் முயற்சியில் இந்தியா ஈடுபட்டுள்ளது. இந்த நிலையில், அரசு முறை பயணமாக இந்தியா வந்த ரஷ்ய துணைப் பிரதமர் டெனில் மான்ட்ரூவ், பிரதமர் மோடி, வெளியுறவுத்துறை அமைச்சர் ஜெய்சங்கர், நிதி அமைச்சர் நிர்மலா சீதாராமன், தேசியப் பாதுகாப்பு ஆலோசகர் அஜித் தோவல் ஆகியோரை சந்தித்து பேசினார். இந்த சந்திப்பின் போது பல்வேறு விவகாரங்கள் குறித்து ஆலோசனை செய்யப்பட்டு உள்ளது.

ஒன்றிய அரசு வட்டாரங்கள் கூறியதாவது, இந்திய சந்தைக்குத் தேவையான திரவ வடிவ இயற்கை எரிவாயு, கச்சா எண்ணெய் ஆகியவற்றை கூடுதலாக விநியோகிக்க தங்கள் நாட்டு நிறுவனங்களால் முடியும் என ரஷ்ய துணை பிரதமர் வாக்குறுதி அளித்துள்ளார். இந்தியாவுக்கான உர ஏற்றுமதியை 40 சதவீதம் வரை அதிகரித்ததைச் சுட்டிக்காட்டிய அவர், அதேபோல் இந்திய தேவைகளைப் பூர்த்தி செய்ய ரஷ்யா தயாராக இருப்பதாகவும் தெரிவித்துள்ளார்.

செய்திகள்
உடனுக்குடன் படிக்க
தினத்தளம்
DHINATH DHALAM
வாட்ஸ் அப் குரூப்பில்
இணையுங்கள்

Join my WhatsApp group.
https://chat.whatsapp.com/CgGZM7snNtZ0QMr6or5zVx?mode=wwt

ஓட்டப்பிடாரம் சட்டமன்ற தொகுதியில் போட்டியிடும் வழக்கறிஞர் அருணாதேவி ரமேஷ் பாண்டியன் மாட்டுவண்டியில் ஊர்வலமாக சென்று வேட்பு மனு தாக்கல் செய்தார்

தூத்துக்குடி மாவட்டத்தின் ஓட்டப்பிடாரம் சட்டமன்ற தொகுதியின் நேற்று அரசியல் சூழல் ஒரு வித்தியாசமான காட்சியை கண்டது வழக்கமாக கார்கள் ஜீப்புகள் நிரம்பி இருக்கும் தேர்தல் ஊர்வலங்களுக்கும் மாறாக இம்முறை மாட்டு வண்டி முன்னிலையில் மக்கள் கவனம் ஈர்த்தார் 'நம்நாடு நம்மக்கள் நம்எதிர்காலம்' கட்சி சார்பில் போட்டியிடும் வழக்கறிஞரும் அந்தக் கட்சியின் பொதுச் செயலாளருமான அருணா தேவி ரமேஷ் பாண்டியன் புதியம்புத்தூர் ஜங்ஷன் முதல் தனது வேட்பு மனு ஊர்வலத்தை தொடங்கிய அருணாதேவி மாட்டுவண்டியில் மேலம் தாளம் வழங்க கட்சியின் தலைவர் பொன் குமரன் தலைமையில் ஊர்வலமாக சென்றார்.

இந்த ஊர்வலம் ஓட்டப்பிடாரம் வட்டாட்சியர் அலுவலகத்தை அடைந்தது அருணாதேவி ரமேஷ் பாண்டியன் தனது வேட்பு மனுவை தேர்தல் அதிகாரி சுப்புலட்சுமியிடம் தாக்கல் செய்தார்.

பின்னர் செய்தியாளர்களை சந்தித்து அருணா தேவி ரமேஷ் பாண்டியன் பேசுகையில்: மக்களின் குரல் எங்கெல்லாம் ஒதுக்கப்படுகிறதோ அங்கு களத்தில் நின்று சமநீதியைப் பெற்று தந்திருக்கின்றேன் பல கட்சிகள் இருந்தாலும் ஓட்டப்பிடாரம் தொகுதியில் அடிப்படை வசதி இல்லை குறிப்பாக குடிநீர் பெண்கள் பாதுகாப்பு வசதி இல்லாமை வேலைவாய்ப்பு சாலை வசதிகள் காற்றாலையால் விவசாயம் நிலங்கள் அழிப்பு போன்றவைகள் உள்ளது ஓட்டப்பிடாரம் தொகுதியில் வெற்றி பெற்றால் அரசு மருத்துவமனை கொண்டு வருவேன் பெண்களுக்கு என்று ஓட்டப்பிடாரத்தில் பள்ளிகளோ கல்லூரிகளோ கிடையாது வெற்றி பெற்றால் பெண்களுக்கென்று தனியாக பள்ளி கல்லூரி அமைத்து தருவேன் பெண்கள் விழிப்புணர்வு மையங்களும் அமைத்து தருவேன் ஓட்டப்பிடாரம் தொகுதியை செழிப்பாக மாற்றி காட்டுவேன். சூப்பரா இருக்கு ஓட்டப்பிடாரம் தொகுதியில் உள்ள புதியம்புத்தூர் பகுதியில் ஜவுளி தொழில் அதிகம் ஆகவே குட்டி சிங்கப்பூர் என்று அழைப்பார்கள் ஆனால் அந்த தொழில் முற்றிலுமாக பாதிக்கப்பட்டுள்ளது அதனை மீட்டெடுப்பேன். அது மட்டுமல்ல விவசாயத் தொழில் வளர்ச்சி எதுவும் இல்லை ஓட்டப்பிடாரம் தொகுதியில் வெற்றி பெற்றவுடன் விவசாயிகளுக்கு எதிரியான காற்றாலைகளை முதலில் அகற்ற பாடுபடுவேன் திராவிட கட்சிகளுக்கும் மாற்றாக ஓட்டப்பிடாரம் தொகுதியில் 'நம்நாடு நம்மக்கள் நம்எதிர்காலம்' கட்சி வரவேண்டும் என்பது மக்களின் எண்ணம் இந்த முறை மக்கள் மாற்றத்தை தேர்வு செய்வார்கள் ஒரு லட்சம் வாக்கு வித்தியாசத்தில் 'நம்நாடு நம்மக்கள் நம்எதிர்காலம்' கட்சி உறுதியாக வெற்றி பெறும் என்று தெரிவித்தார்.

மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி கட்சிகளின் சார்பில் தூத்துக்குடி சட்டமன்ற தொகுதி வேட்பாளர் கீதாஜீவன் 39,27,28 ஆகிய வார்டுகளில் தேர்தல் பிரச்சாரம் மேற்கொண்டார்

தூத்துக்குடியில் தேர்தல் பரப்புரையில் ஈடுபட்ட திமுக வேட்பாளர் அமைச்சர் கீதா ஜீவன் "திராவிட மாடல் ஆட்சியில் தமிழகத்தில் 4,000 கோவில்களுக்குத் திருப்பணிகள் நடைபெற்றது" என்று தெரிவித்தார்.

தூத்துக்குடி சட்டமன்றத் தொகுதி திமுக வேட்பாளர் அமைச்சர் கீதா ஜீவன், மாநகரின் பல்வேறு பகுதிகளில் தீவிர வாக்குச் சேகரிப்பில் ஈடுபட்டார். கீழ ரங்கநாதபுரத்தில் தொடங்கி வடக்கு ரதவீதி, ஜோசப் தியேட்டர் உள்ளிட்ட பகுதிகளில் திறந்த ஜீப்பில் சென்று அவர் ஆதரவு திரட்டினார்.

அப்போது அவர் பேசுகையில், "தமிழகத்தில் திமுக ஆட்சியில் இதுவரை 4,000-க்கும் மேற்பட்ட கோவில்களுக்குக் கும்பாபிஷேகம் செய்யப்பட்டுள்ளது. ரயில்வே விரிவாக்கத்தால் அகற்றப்படவிருந்த விநாயகர் கோவிலுக்கு மாற்று இடம் வழங்கி, புதிய கோவில் கட்டித் தரப்பட்டுள்ளது.

கொரோனா மற்றும் வெள்ளப் பேரிடர் காலங்களில் மக்களுடன் நின்று பணியாற்றியுள்ளேன். தூத்துக்குடியின் மழைநீர் வடிகால் கட்டமைப்பு மேம்படுத்தப்பட்டுள்ளது. வின்பாஸ்ட் தொழிற்சாலை, டைடல் பார்க் மூலம் வேலைவாய்ப்புகள் பெருகியுள்ளன. தேர்தல் வாக்குறுதிப்படி இல்லத்தரசிகளுக்கு ரூ. 8,000 மதிப்பிலான கூப்பன்கள் வழங்கப்படும். முன்னதாக, விநாயகர் கோவிலில் சாமி தரிசனம் செய்த அமைச்சருக்குப் பூரண கும்ப மரியாதை அளிக்கப்பட்டது. தொடர்ந்து வ.உ.சி படத்திற்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார்.

இந்தப் பிரச்சாரத்தில் காங்கிரஸ் மாவட்டத் தலைவர் சகாயராஜ், தேமுதிக தயாளலிங்கம், மக்கள் நீதி மய்யம் ஜவஹர், விடுதலை சிறுத்தைகள் கட்சி விமல் வங்காளியர், மனிதநேய மக்கள் கட்சி யூசுப், கம்யூனிஸ்ட் கட்சி நிர்வாகிகள் தனலட்சுமி, மற்றும் மதிமுக, எஸ்டிபிஐ உள்ளிட்ட கூட்டணி கட்சிகளின் மாவட்ட, மாநகர நிர்வாகிகள் பெருமளவில் கலந்து கொண்டனர்.

பத்திரம் காணவில்லை

கடலூர் மாவட்டம் திட்டக்குடி வட்டம் சிறுகரம்பலூர் கிராமம் பெரியம்மாள் க/பெ அழகப்பன் என்ற முகவரியை கொண்ட நான் என் பெயருக்கு கிரயம் பெற்ற ஆவண எண் 95/1992 மற்றும் எனது கணவர் அழகப்ப கோனார் பெயரில் கிரயம் பெற்ற ஆவண எண்.878/1995, மற்றும் 263/2000 உள்ளிட்ட அசல் பத்திர ஆவணங்கள் கடந்த வாரம் 27.2.2026 அன்று எனது கிராமத்திலிருந்து வேப்பூருக்கு பேருந்தில் செல்லும் போது கூட்ட நெரிசலில் ஆவணங்கள் தவற விட்டு விட்டேன் இது தொடர்பாக வேப்பூர் காவல் நிலையத்தில் 3.3.2026 அன்று புகார் தெரிவித்துள்ளேன் மேலும் இதுதொடர்பான ஆவணங்கள் கிடைத்தால் வேப்பூர் காவல் நிலையத்தில் தகவல் தெரிவிக்கவும்.

பெரியம்மாள், சிறுகரம்பலூர்

செல்: 7904714626

தூத்துக்குடி மாவட்டத்தின் புதிய ஆட்சியராக விஷு மகாஜன் பொறுப்பேற்றார்

தூத்துக்குடி மாவட்டத்தின் புதிய மாவட்ட தேர்தல் அலுவலர் மற்றும் மாவட்ட ஆட்சியராக விஷு மகாஜன் இன்று மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் பொறுப்பேற்றுக் கொண்டார்.

தூத்துக்குடி மாவட்ட ஆட்சியராக பணியாற்றி வந்த இளம்பகவத் பணியிட மாற்றம் செய்யப்பட்டார். அவருக்குப் பதிலாக தூத்துக்குடி மாவட்டத்தின் புதிய மாவட்ட தேர்தல் அலுவலர் மற்றும் மாவட்ட ஆட்சியராக விஷு மகாஜன் நியமிக்கப்பட்டார். இந்த நிலையில் அவர் இன்று மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் பொறுப்பேற்றுக் கொண்டார்.

பொறுப்பேற்ற பின் செய்தியாளர்களிடம் பேசிய மாவட்ட ஆட்சியர் விஷு மகாஜன் தெரிவித்ததாவது: இன்று தூத்துக்குடி மாவட்ட ஆட்சியராக பொறுப்பேற்றுள்ளேன். வரலாற்று சிறப்புமிக்க மாவட்டத்தின் மாவட்ட ஆட்சியராக பொறுப்பேற்றுக் கொண்டதில் எனக்கு மிகவும் மகிழ்ச்சியாக இருக்கிறது. தற்போது மாவட்ட நிர்வாகத்தின் முக்கிய பணி, தமிழ்நாடு சட்டமன்ற பொதுத்தேர்தல் 2026 – யை சுதந்திரமாகவும், நியாயமாகவும் மற்றும் அமைதியான முறையில் நடத்துவதாகும்.

அதற்கான அனைத்து ஏற்பாடுகளும் செய்யப்பட்டு வருகின்றன. இந்த பணியில் அனைவரும் தங்களுடைய ஒத்துழைப்பை தருமாறும் கேட்டுக் கொள்கிறேன். மேலும், தூத்துக்குடி மாவட்டத்தின் அனைத்து பொதுமக்களும் தங்களுடைய வாக்குரிமையை பயன்படுத்தி 100 சதவீதம் வாக்குப்பதிவினை உறுதிசெய்யுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

தேர்தல் பணிகள் அனைத்தும் தேர்தல் ஆணையத்தின் அறிவுறுத்தல் மற்றும் விதிகளின்படி செய்யப்பட்டு வருகின்றன. அந்த அறிவுறுத்தல் மற்றும் விதிகளின்படி மாவட்ட நிலையிலான அலுவலர்கள் அனைவரும் ஒரு குழுவாக ஒன்றினைந்து செயல்பட்டு தமிழ்நாடு சட்டமன்ற பொதுத்தேர்தல் – 2026 யினை சிறப்பான முறையில் நடத்த வேண்டும் என மாவட்ட தேர்தல் அலுவலர் மற்றும் மாவட்ட ஆட்சியர் விஷு மகாஜன் தெரிவித்தார்.

மதுராந்தகம் தனி தொகுதி மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி கட்சியினரை சந்தித்து வெற்றி வேட்பாளர் அமுலு பொன்மலர் வாக்கு சேகரிப்பு

செங்கல்பட்டு மாவட்டம் தமிழகத்தில் மீண்டும் திமுக ஆட்சி மலரும் மதுராந்தகம் திமுக வேட்பாளர் அமுலு பொன்மலர் அச்சிறுப்பாக்கம் தெற்கு ஒன்றியத்தில் உள்ள பெரும்பேர் கண்டிகை ஒரத்தி உள்ளிட்ட கிராமங்களில் திமுக உள்ளிட்ட மதச்சார் பற்ற முற்போக்கு கூட்டணி கட்சி நிர்வாகிகளை நேரில் சந்தித்து உதயசூரியன் சின்னத்திற்கு ஆதரவு திரட்டினார். அப்போது அவர்களிடம் வேட்பாளர் அமுலு பொன்மலர் பேசுகையில், கூப்பன், 1.5 லட்சம் பேருக்கு தமிழ்நாட்டில் திராவிட மாடல் அரசு மீண்டும் அமைந்தால் பெண்களுக்கு ரூ.2,000, இல்லத்தரசி என்ற புதிய திட்டத்தில் ரூ.8,000 வேலைவாய்ப்பு உள்ளிட்ட மகத்தான திட்டங்களை பெற முடியும். ஆகவே மீண்டும் திராவிட மாடல் ஆட்சி அமைய. உதயசூரியன் சின்னத்தில் வாக்களித்து பெரும்வாரியான வாக்கு வித்தியாத்தில் வெற்றபெற செய்ய வேண்டும் என்று பேசினார். இதில், ஒன்றியகுழு பெருந்தலைவர் ஒரத்தி கே, கண்ணன் , உள்ளிட்ட. திமுக கட்சி நிர்வாகிகள், மதசார்பற்ற முற்போக்கு கூட்டணி கட்சி நிர்வாகிகள் உள்ளிட்ட மகளிர் அணியினர் ஏராளமானோர் கலந்து கொண்டனர்.

கடையநல்லூர் சட்டமன்ற தொகுதி மதச்சார்பற்ற ஜனநாயக கூட்டணி வேட்பாளர் அறிமுக கூட்டம்

தென்காசி மாவட்டம் கடையநல்லூரில் மதிமுக சார்பில் உதயசூரியன் சின்னத்தில் போட்டியிடும் வேட்பாளர் திமுராஜேந்திரன் அறிமுக கூட்டம் நடைபெற்றது தென்காசி மாவட்டம் கடையநல்லூர் சட்டமன்றதொகுதியில் போட்டியிடும் வேட்பாளர் ராஜேந்திரன் அவர்களின் தேர்தல் அலுவலகம் திறப்பு விழா மற்றும் வேட்பாளர் அறிமுக கூட்டம் கடையநல்லூரில் வெகு சிறப்பாக நடைபெற்றது தலைமை செயற்குழு உறுப்பினர் டாக்டர் செல்லத்துரை தலைமையில் தேர்தல் காரியாலயம் திறக்கப்பட்டது நிகழ்ச்சியில் வாசுதேவநல்லூர் சட்டமன்ற உறுப்பினர் டாக்டர் சதன் திருமலை குமார் முன்னாள் நகர் மன்ற தலைவர் டாக்டர் சஞ்சீவி கடையநல்லூர் தொகுதி தேர்தல் பார்வையாளர் குணசேகரன் நகரக் கழக செயலாளர் அப்பாஸ் பொறுப்பாளர் இத்தாலிய ன் பீரப்பா கடையநல்லூர் நகர மன்ற தலைவர் முனைவர் மூப்பன் ஹபிபூர் ரகுமான் வடகரை பேரூராட்சி மன்ற தலைவர் ஷேக்தாவூது மாவட்ட பொருளாளர் எம் ஏ எம் ஷெரீப் மதிமுக நகர செயலாளர் முருகன் ஒன்றிய செயலாளர் பொன்மாரியப்பன் நடுவை சொ முருகன் கம்யூனிஸ்ட் ராஜசேகரன் எஸ்டிபிஐ ஆ:பர்கான் விடுதலைச் சிறுத்தைகள் பாக்கியநாதன் தேமுதிக சரவணன் தமிழ் புலிகள் சேகர் மற்றும் கூட்டணி கட்சியினர் முன்னாள் தென்காசி ஊராட்சி ஒன்றிய குழு தலைவி தமிழ்ச்செல்வி முருகன் நகர் மன்ற உறுப்பினர்கள் சிட்டி திவான் மைதீன் ராமகிருஷ்ணன் தனலட்சுமி மகளிர் அணி தனம் மாவட்ட திட்டக்குழு உறுப்பினர் முருகன் மற்றும் ஏராளமான கூட்டணி கட்சி நிர்வாகிகள் செயலாளர் கலந்து கொண்டனர் தேர்தல் காரியாலயம் திறப்பு விழா முடிந்தவுடன் தென்காசி மதுரை கொல்லம் தேசிய நெடுஞ்சாலையில் அச்சம்பட்டியில் அமைந்துள்ள எஸ் எஸ் கிராண்ட் மஹாலில் நடைபெற்ற வேட்பாளர் அறிமுக கூட்டத்திற்கு தென்காசி மாவட்ட திமுக பொறுப்பாளர் ஜெயபாலன் தலைமை தாங்கினார் தலைமை செயற்குழு உறுப்பினர் டாக்டர் செல்லத்துரை டாக்டர் சதன் திருமலை குமார் டாக்டர் சஞ்சீவி நகரச் செயலாளர் அப்பாஸ் பொறுப்பாளர் பீரப்பா ஒன்றிய செயலாளர் சுரேஷ் மணிகண்டன் இளைஞர் அணி யாசின் கூட்டணி கட்சியைச் சார்ந்த காங்கிரஸ் விடுதலைச் சிறுத்தைகள் எஸ்டிபிஐ முஸ்லிம் லீக் கம்யூனிஸ்ட் (சிபிஎம்) மனிதநேய மக்கள் கட்சி இந்திய கம்யூனிஸ்ட் தமிழ்புலிகள் ஆதித்தமிழர் பேரவை உட்பட கூட்டணி கட்சியைச் சார்ந்த நிர்வாகிகள் கலந்துகொண்டு வேட்பாளர் அறிமுகம் செய்தனர் திருநெல்வேலி மாவட்டத்திலிருந்து தென்காசி மாவட்டம் தனியாக பிரிக்கப்பட்ட கதை அதிமுக அடிமைகளுக்கு தெரிந்திருக்க நியாயம் இல்லை ஒருங்கிணைந்த திருநெல்வேலி மாவட்டம் தற்போது தென்காசி மாவட்டத்தில் தான் நான் பிறந்த வளர்ந்த வாழ்ந்த பகுதி உள்ளது கொள்கை ரீதியாக எதிர்க்க திராணியற்றவர்கள் உள்ளூர் காரன் வெளியூர்க்காரன் என்ற பாகுபாட சொல்லிப் பார்த்தாலும் அவர்களது பிரச்சாரம் பொதுமக்களிடம் எடுபடவில்லை அதற்கு காரணம் தமிழகத்தின் முதல்வர் முத்தமிழ் அறிஞர் மூத்தவர் கலைஞர் அவர்களின் மகன் முத்துவேல் கருணாநிதிஸ்டாலின் அவர்கள் இன்று வரை பெண்களுக்கு மகளிர் உரிமைத் தொகை இலவச பேருந்து பயணம் மாணவர்களுக்கு நான் முதல்வன் காலை உணவு கல்லூரி மாணவர்களுக்கு உண்டான திட்டம் இப்படி எல்லோர் தரப்பு மக்களும் பயன்பெறும் வகையில் வழங்கும் திட்டங்கள் தான் எனது வெற்றிக்கு முதல் காரணம் இதை உணராது எதிர்க்கட்சியினர் வேற்று மாவட்டத்தை சார்ந்தவன் என பேசுவது முகநூலில் பதிவிடுவதும் வேடிக்கையாக உள்ளது நான் சட்டமன்ற உறுப்பினராக தேர்வு செய்யப்பட்டால் அரசு வழங்கிய கடையநல்லூர் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி அலுவலகத்தில் இருப்பது போல் கடையநல்லூர் தொகுதிக்கு பெருமை சேர்க்கும் அரசின் நலத்திட்டங்கள் அனைத்தும் அன்றாட ஏழை எளிய மக்களுக்கு உதவிடும் வகையில் செயல்படும் திராவிட முன்னேற்றக் கழகத்தின் சின்னமா உதயசூரியன் கூட்டணி கட்சிகளான கை பம்பரம் கதிர் அருவாள் சுத்தியல் நெல் கதிர் அருவாள் பானை சின்னங்களில் உங்களது பெருவாரியான வாக்குகளை செலுத்துமாறு கேட்டுக்கொள்கிறேன் என்று கூறினார்

தேனி மாவட்டம் பெரியகுளம் 199 தனி சட்டமன்ற தொகுதியின் அதிமுக கூட்டணி கட்சி சார்பாக போட்டியிடும் வேட்பாளர் கதிர்காமு அ ம மு க சார்பில் பெரியகுளம் சார் ஆட்சியர் ரஜத் பீடனிடம் வேட்பு மனுவை தாக்கல் செய்தார் உடன் மாவட்ட செயலாளர், ஒன்றிய செயலாளர், நகரச்செயலாளர், கூட்டணிக்கட்சிகள் மற்றும் அனைத்து தரப்பு நிர்வாகிகளுடன் மேளதாளத்துடன் வேட்பு மனுவை தாக்கல் செய்தார்.

ஈரோடு மாவட்ட தேர்தல் அலுவலர்/மாவட்ட ஆட்சித்தலைவர் ச.கந்தசாமி நேற்று (04.04.2026) ஈரோடு மாவட்டம், பெருந்துறை சாலை, திண்டல், ஏழைகளின் சிறிய சகோதரிகள் முதியோர் இல்லத்தில் மாவட்ட சமூக நலத்துறையின் சார்பில் நடைபெற்ற தமிழ்நாடு சட்டமன்ற பொதுத் தேர்தல் 2026, 100 சதவீதம் வாக்குப்பதிவு குறித்த விழிப்புணர்வு நிகழ்ச்சியில் இசையுடன் தேர்தல் விழிப்புணர்வு பாடல் பாடிய முதியோருக்கு பொன்னாடை அணிவித்து வாழ்த்துக்களைத் தெரிவித்தார்.

தூத்துக்குடி சட்டமன்ற தொகுதியில் போட்டியிடும் தமிழக வெற்றிக் கழக வேட்பாளர் ஸ்ரீநாத் கோட்டாட்சியர் அலுவலகத்தில் தேர்தல் நடத்தும் அலுவலர் பிரபுவிடம் மனு தாக்கல் செய்தார்

தூத்துக்குடி சட்டமன்ற தொகுதியில் தமிழக வெற்றி கழகம் சார்பில் நடிகர் ஸ்ரீநாத் போட்டியிடுகிறார் இன்று வேட்பு மனு தாக்கல் செய்ய தமிழக வெற்றிக்கழக வேட்பாளர் ஸ்ரீநாத் தூத்துக்குடி மாநகரில் இருசக்கர வாகன பேரணியில் ஊர்வலமாக தமிழக வெற்றி கழக தொண்டர்கள் படை சூழ வந்தார்.

இதைத் தொடர்ந்து தூத்துக்குடி கோட்டாட்சியர் அலுவலகத்தில் தேர்தல் நடத்தும் அலுவலர் வருவாய் கோட்டாட்சியர் பிரபுவிடம் தமிழக வெற்றிக் கழக வேட்பாளர் ஸ்ரீநாத் தனது வேட்புமனுவை முறைப்படி வழங்கினார். வேட்பாளர் ஸ்ரீநாத்துக்கு மாற்று வேட்பாளராக அவரது மனைவி வசிந்த்ரா ரோச் (40), தனது மனு வைத்தாக்கல் செய்தார். இதில் த.வெ.க மத்திய மாவட்டச் செயலாளர் எஸ்.டி.ஆர். சாமுவேல் ராஜ், தொழிலதிபர் கிஷோர், வழக்கறிஞர் பிரிவுச் செயலாளர் ஏசுதாசன், முன்னாள் நகராட்சி கவுன்சிலர் கோல்டன் ஆகியோர் உடனிருந்தனர்.

போடிநாயக்கனூர் சட்டமன்றத் தொகுதி அதிமுக வேட்பாளர் நாராயணசாமி வேட்பு மனு தாக்கல் செய்தார்

போடிநாயக்கனூர் அரண்மனை வளாகம் முன்பு அமைந்துள்ள கட்டபொம்மன் சிலையிலிருந்து பேண்டு செட்டுகள் மேளதாளங்கள் முழங்க சுமார் ஐந்தாயிரத்திற்கு மேற்பட்ட கட்சி தொண்டர்கள் மற்றும் கூட்டணிகட்சித்தொண்டர்கள் ஊர்வலமாக வர அங்கிருந்துதிறந்தவெளி வாகனத்தில் சுமார் ஒரு கிலோமீட்டர் பொதுமக்களிடம் தேர்தல் பிரச்சாரம் செய்தபடி ஊர்வலமாக வந்து வேட்புமனு தாக்கல் செய்தார் . பின்னர் தேர்தல் நடத்தை விதிமுறை களுக்கு உட்பட்டு மாற்று வேட்பாளராக தனது மகன் சூரிய பிரகாசை நியமனம் செய்து தேர்தல் அலுவலர் நல்ல இடம் பிரமாண பத்திரம் தாக்கல் செய்து வேட்பு மனு தாக்கல் செய்தார்.

தேனி மாவட்ட அதிமுக தேர்தல் பார்வையாளர் பாப்புலர் முத்தையா தேனி தெற்கு மாவட்ட அதிமுக செயலாளர் எஸ் டி கே ஜக்கையன் மற்றும் நிர்வாகிகள் உடன் இருந்தனர்.

மதுரை கிழக்கு தொகுதியின் அதிமுக வேட்பாளர் மாங்குளம் மகேந்திரன் அவர்கள் ஒத்தக்கடையில் உள்ள கிழக்கு சட்டமன்றத் தொகுதியில் தேர்தல் அலுவலர் கருணாகரன் அவர்களிடம் வேட்புமனு தாக்கல் செய்தார் உடன் பாரதிய ஜனதா கட்சியின் மாநில கூட்டுறவு பிரிவு தலைவர் மகா சுசீந்திரன் கார்சேரி கணேசன், கார்த்திகேயன் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

ஈரோடு மாவட்டம் மொடக்குறிச்சி சட்டமன்றத் தொகுதியில் மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணியின் திமுக வேட்பாளர் சா.செந்தில்நாதன் போட்டியிடுகிறார். இந்நிலையில், ஈரோடு முள்ளாம்பரப்பு பகுதியில் உள்ள தனியார் மஹாலில், வேட்பாளர் அறிமுகம் மற்றும் செயல்வீரர்கள் ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றது. இதில், ஈரோடு நாடாளுமன்ற உறுப்பினர் கே.இ.பிரகாஷ் பங்கேற்று சிறப்புரையாற்றினார்.

தேனி மாவட்டம் ஆண்டிபட்டி வட்டாட்சியர் அலுவலகத்தில் அனைத்திந்திய அண்ணாதிராவிடமுன்னேற்றக்கழகத்தின்ஆண்டிபட்டிசட்டமன்றத்தொகுதிவேட்பாளர் A.லோகிராஜன் வேட்புமனுவை ஆண்டிபட்டி வட்டாட்சியரிடம் தாக்கல் செய்தார். பாரதிய ஜனதா கட்சியின் தேனி மாவட்ட தலைவர் ராஜபாண்டி அஇஅதிமுக மாவட்ட செயலாளர் முறுக்கோடை ராமர், ஜெயக்குமார் உடன் இருந்தனர்.

சேலம் மாவட்டம் ஓமலூர் வட்டாட்சியர் அலுவலகத்தில் மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணியின்சார்பில்தேமுதிகசார்பில்ஓமலூர்சட்டமன்றத்தொகுதியில்போட்டியிடும் வேட்பாளர் A. R.இளங்கோவன் தேர்தல் அதிகாரியிடம் வேட்புமனு தாக்கல் செய்தார். உடன் திமுக தேர்தல் பொறுப்பாளர் சுவனம் மற்றும் விடுதலைச் சிறுத்தைகள் கட்சியின் மாவட்டச் செயலாளர் சாமுராய்குரு , நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

திருப்பரங்குன்றம் திமுக வேட்பாளர் கிருத்திகா தங்கபாண்டியன் தனது வேட்பு மனுவை தேர்தல் அதிகாரியிடம் வழங்கினார்

மதுரை மாவட்டம் திருப்பரங்குன்றம் சட்டப்பேரவைத் தொகுதியில் போட்டியிடும் திமுக வேட்பாளர் கீர்த்திகா தங்கபாண்டியன், இன்று தனது வேட்புமனுவை அதிகாரப்பூர்வமாகத் தாக்கல் செய்தார்.

முன்னதாக, திருநகர் யூனியன் அலுவலகத்தில் இருந்து தனது ஆதரவாளர்களுடன் கீர்த்திகா தங்கபாண்டியன் பேரணியாகப் புறப்பட்டார். இந்தப் பேரணியில் தேமுதிக காங்கிரஸ் விடுதலை சிறுத்தைகள் கட்சி இந்திய கம்யூனிஸ்ட் மற்றும் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் உள்ளிட்ட கூட்டணி கட்சிகளின் நிர்வாகிகள் மற்றும் தொண்டர்கள் பெருமளவில் கலந்து கொண்டனர். வழிநெடுகிலும் உற்சாக வரவேற்பு அளிக்கப்பட்டது.

அதனை தொடர்ந்து திருப்பரங்குன்றம் தாலுகா அலுவலகத்திற்கு வருகைதந்தவேட்பாளர், கிர்த்திதா தங்கபாண்டியன் தேர்தல் நடத்தும் அலுவலரிடம் தனது வேட்புமனுவை சமர்ப்பித்தார்.

திமுகவின் அதிகாரப்பூர்வ வேட்பாளர் கீர்த்திகா தங்கபாண்டியன் அவர்களுடன்,அக்கட்சியின் சார்பில் மாற்று வேட்பாளராக தனபால் அவர்களும் வேட்புமனுத் தாக்கல் செய்ய தாலுகா அலுவலகத்திற்கு வருகை தந்து திருந்தார்

தேர்தல் விதிமுறைகளின்படி, தாலுகா அலுவலகத்திற்குள் வேட்பாளருடன் சேர்த்து ஐந்து நபர்களுக்கு மட்டுமே செல்ல காவல்துறை அனுமதி வழங்கியது. பாதுகாப்பு கருதி தாலுகா அலுவலகம் முழுவதும் மற்றும் அதைச் சுற்றியுள்ள பகுதிகளில் ஏராளமான காவல்துறையினர் குவிக்கப்பட்டு,

பலத்த பாதுகாப்புப் பணியில் ஈடுபட்டு வருகின்றனர். இதனால் அந்தப் பகுதியில் பெரும் பரபரப்பான சூழல் நிலவுகிறது. பேட்டி வேட்பாளர் S. கிருத்திகா தங்கப்பாண்டி நான் எனது வேட்பு மனுவை தாக்கல் செய்துவிட்டு மிக சந்தோசமாக உள்ளது திருப்பரங்குன்றம் கோயில் தீப பிரச்சனை குறித்த கேள்விக்கு திருப்பரங்குன்றம் மலை மீது உள்ள தீபம் ஏற்றுவது தொடர்பாக வழக்கு நீதிமன்றத்தில் உள்ளது நீதிமன்றம் தீர்வு கூறும் அது பற்றி கருத்து சொல்ல முடியவில்லை

கடந்த 20 ஆண்டுகளாக அதிமுக வசம் இருந்த திருப்பரங்குன்றம் தொகுதி தற்பொழுது மக்களுக்கு தேவையான சாலை வசதி அடிப்படை வசதிகள் எதுவும் சரியாக செய்து தரவில்லை

தவெகாநிர்மல்குமார் மற்றும்முன்னாள்சட்டமன்றஉறுப்பினர்போட்டி போட்டியிடுகின்றனர் போட்டி எப்படி இருக்கிறது என்ற கேள்விக்கு அது பற்றி கவலை இல்லை எனக்கு உதவி செய்ய எனது கூட்டணி கட்சியினர் அண்ணன்கள் அப்பாக்கள் உதவியாக இருக்கிறார்கள் எனவே அது பற்றி எனக்கு பயம் இல்லை

திருப்பரங்குன்றத்தில் நான் வெற்றி பெற்ற மக்களுக்கு தேவையான அனைத்து அடிப்படை வசதிகளையும் செய்துதர மக்களின் பிரதிநிதியாக செயல்படுவேன்

மாநில அளவிலான எறிபந்து போட்டியில் நந்தா சென்டரல் பள்ளி சாதனை

திருப்பூர் சஹோதயா சி.பி.எஸ்.சி பள்ளிகளுக்கிடையேயான 14 வயதிற்குட்பட்ட மாணவர்களுக்கான மாநில அளவிலான எறிப்பந்து போட்டி திருப்பூரில் அண்மையில் நடைபெற்றது. கிட்ஸ் கிளப் இன்டர்நேஷனல் பள்ளியில் நடைப்பெற்ற இப்போட்டியில் திருப்பூர் மற்றும் ஈரோடு மாவட்ட 30 பள்ளிகளை சார்ந்த மாணவர்கள் 30 அணிகளாக களம் இறங்கினார்கள்.

இவர்களுடன் கூரப்பாளையம் பிரிவில் இயங்கிவரும் நந்தா சென்டரல் மெயின் பள்ளியினை சார்ந்த மாணவர்கள் போட்டிகளை எதிர்க்கொண்டார்கள். பல்வேறு சுற்றுகளை கடந்து இறுதி போட்டிக்கு தகுதிப்பெற்றார்கள். இறுதிப் போட்டியின்முடிவில்இரண்டாம் இடத்தினைதக்கவைத்து பெருமை சேர்த்தார்கள்.

இரண்டாம் இடத்தினைதக்கவைத்து பள்ளிக்கு பெருமை சேர்த்த மாணவர்களுக்கு ஸ்ரீ நந்தா கல்வி அறக்கட்டளையின் தலைவர் வி. சண்முகன் சிறப்பு பரிசுகளை வழங்கி பாராட்டினார்.

மேலும் ஸ்ரீ நந்தாகல்வி அறக்கட்டளையின் அங்கத்தினர் பானுமதி சண்முகன், இணை நிர்வாக அறங்காவலர்களான எஸ்.நந்தகுமார் பிரதீப், எஸ்.திருமூர்த்தி, பள்ளியின் நிர்வாக இயக்குனர் விதுஷா மூர்த்தி, முதல்வர் சாரா இப்ராஹிம், நிர்வாக அதிகாரி மனோகரன் மற்றும் உடற்கல்வி ஆசிரியர்கள் செந்தில் குமார், தயாநிதி ஆகியோர் மாணவிகளை பாராட்டி தனது வாழ்த்துகளைத் தெரிவித்தார்கள்.

திண்டுக்கல் மாவட்டம், ஒட்டன்சத்திரம் சட்டமன்ற தொகுதி திமுக வேட்பாளர் அர.சக்கரபாணி, ஒட்டன்சத்திரம் வட்டாட்சியர் அலுவலகத்தில் தேர்தல் நடத்தும் அலுவலர் பிரபு அவர்களிடம் தனது வேட்பு மனுவை அளித்தார். உடன் வட்டாட்சியர் தேர்தல் நடத்தும் உதவி அலுவலர் வி.சஞ்சய்காந்தி மற்றும் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் ப.காளியப்பன் மற்றும் பலர் உள்ளனர்.

திண்டுக்கல் மாவட்டம், ஒட்டன்சத்திரம் சட்டமன்ற தொகுதி சுயேட்சை வேட்பாளர் ஒட்டன்சத்திரம் நகராட்சி சத்யாநகர் ப.உதயகுமார், ஒட்டன்சத்திரம் வட்டாட்சியர் அலுவலகத்தில்தேர்தல்நடத்தும்அலுவலர்பிரபுவிடம்தனதுவேட்புமனுவைஅளித்தார். உடன் வட்டாட்சியர் தேர்தல் நடத்தும் உதவி அலுவலர் வி.சஞ்சய்காந்தி மற்றும் சமூக ஆர்வலர் ஆ.இளங்கோவன் மற்றும் பலர் உள்ளனர்

மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி கட்சிகளின் சார்பில் தூத்துக்குடி சட்டமன்ற தொகுதி வேட்பாளர் பெ.கீதாஜீவன் 39,27,28 ஆகிய வார்டுகளில் தேர்தல் பிரச்சாரம் மேற்கொண்டார். அப்போது, 39வது வார்டு மாமன்ற உறுப்பினர் சுரேஷ்குமார் திமுக வேட்பாளர் பெ.கீதா ஜீவன் பூங்கொத்து கொடுத்து வரவேற்றார். தொடர்ந்து, 39,27,28வது வார்டு பகுதிகளுக்கு சென்று மக்களை சந்தித்து வாக்கு சேகரித்தார். பிரச்சாரத்தின் போது பொதுமக்கள்மலர்தூவி ஆர்த்தி எடுத்து உற்சாகமாக வரவேற்பு அளித்தனர்.

ஊத்தங்கரையில் கட்சியில் சீட்டு கிடைக்காததால் கட்சி மாறிய மருத்துவர்

கிருஷ்ணகிரி மாவட்டம் ஊத்தங்கரையில் பல் மருத்துவராக பணிபுரிந்து வரும் மருத்துவர் இளைய ராஜாஇவர் அதிமுககட்சியில் பலமுறை அதிமுக சார்பாக ஊத்தங்கரை தனிசட்டமன்ற தேர்தலில் போட்டியிட சீட்டு கேட்டும் சீட்டு கிடைக்காததால் கட்சி மாறியதாக அறிவித்தார்

வெள்ளிக்கிழமை சென்னைக்கு சென்று தமிழக வெற்றிக் கழக தேர்தல் தலைமை அலுவலகத்தில் வெற்றித் தலைவர் விஜய் அனுமதியோடு தன்னை இணைத்துக் கொண்டார். இவர் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்ட கழக செயலாளர் மருத்துவரணி இவர் வகித்து வந்த பதிவியாகும்

தமிழகவெற்றிகழகதலைவர் ஒப்புதலோடு பொதுச் செயலாளர் புஸ்ஸி ஆனந்த் முன்னிலையில் தமிழக வெற்றிக் கழகத்தில் தன்னை இணைத்து கொண்டார்.

மதுராந்தகம் சட்டமன்ற தனித் தொகுதி த.வெ.க வேட்பாளர் எழில் கேத்தரின் வேட்பு மனு தாக்கல்

செங்கல்பட்டு மாவட்டம் மதுராந்தகம் சட்டமன்ற தனி தொகுதி தமிழக வெற்றி கழகம் வேட்பாளர் எழில் கேத்தரின். மதுராந்தகம் தேசிய நெடுஞ்சாலையில் அமைந்துள்ள புரட்சியாளர் அம்பேத்கர் சிலைக்கு மாலை அணிவித்து சுமார் 500க்கும் மேற்பட்ட கட்சி தொண்டர்களுடன் தங்களதுசின்னமானவிசில்ஊதியவாறுஊர்வலமாக சென்று மதுராந்தகம் வருவாய் கோட்டாட்சியர் அலுவலகத்தில் தேர்தல் நடத்தும் அலுவலர் நரேந்திர ராஜ் அவர்களிடம் வேட்பு மனு தாக்கல் செய்தார் அருகில் மாவட்ட நிர்வாகிகள் எம். எஸ்.பாலாஜி சபரி பெருமாள் வழக்கறிஞர் ராஜேஷ் வெற்றிசெல்வன் மகளிர் அணி நிர்வாகி சுமதி சாமிக்கன்னு, உள்ளிட்ட கட்சி நிர்வாகிகள் உடனிருந்தனர்.

கடையநல்லூரில் தவெக வேட்பாளர் ஜலீல் வேட்புமனு தாக்கல் செய்தார்

கடையநல்லூர் சட்டமன்றத் தொகுதியில் நடைபெறவுள்ளசட்டமன்றபொதுதேர்தலை முன்னிட்டு, தமிழக வெற்றிக் கழகம் (தவெக) சார்பில் போட்டியிடும் வேட்பாளர் ஜலீல் இன்று தனது வேட்புமனுவை தாக்கல் செய்தார்.தமிழக வெற்றி கழகத்தின் மத்திய மாவட்ட செயலாளர் நியாஸ் தலைமையில் நகர பொறுப்பாளர் பாலமுருக ன்மணவாளன் மருத்துவ அணி வாசுதேவி ஆகியோர் முன்னிலையில்கடை யநல்லூர் சட்டமன்ற தேர்தல் நடத்தும் அலுவலர் ராஜேந்திரன் அவர்களிடம் வேட்பு மனுவைதாக்கல் செய்தார் கடையநல்லூர் வருவாய் வட்டாட்சியர் பாலசுப்பிரமணியன் உடன் இருந்தார் இந்நிகழ்வில், தவெக கட்சியின் முக்கிய நிர்வாகிகள் மற்றும் பல்வேறு அணித் தலைவர்கள் கலந்து கொண்டு ஜலீலுக்குஆதரவுதெரிவித்தனர்.வேட்புமனு தாக்கல் செய்யப்பட்டதைத் தொடர்ந்து, ஆதரவாளர்கள் உற்சாகமாகக் குரல் கொடுத்து வாழ்த்துகளைத் தெரிவித்தனர். மேலும்,தேர்தலில்வெற்றிபெற்றுமக்களுக்கு தேவையான அடிப்படை சேவைகள் செய்வேன்என்றும்சட்டமன்றஉறுப்பினராக தேர்வு செய்யப்பட்டால் கடையநல்லூர் தொகுதியிலேயே தங்கி இருந்து மக்கள் பணியாற்றுவேன் என்று நம்பிக்கையுடன்வேட்பாளர் ஜலீல் தெரிவித்தார்.

இந்தியா கூட்டணியின் ஈரோடு கிழக்கு சட்டமன்ற தொகுதி வேட்பாளர் கோபிநாத் பழனியப்பன் ஈரோடு மாநகர் பெரியார் நகர் பகுதியில் உள்ள அமைச்சர் முகாம் அலுவலகத்தில் தமிழ்நாடு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை மதுவிலக்கு ஆயத்தீர்வை துறை அமைச்சர் சு. முத்துசாமி அவர்களை சந்தித்து வாழ்த்து பெற்றார்.இந்த நிகழ்வில் ஈரோடு மாநகர் மாவட்ட காங்கிரஸ் கட்சியின் தலைவர் ராஜேஷ் ராஜப்பா,நிர்வாகிகள் மற்றும் உறுப்பினர்கள் உள்ளனர்.

இந்தியா கூட்டணியின் ஈரோடு கிழக்கு சட்டமன்ற தொகுதி வேட்பாளர் கோபிநாத் பழனியப்பன் ஈரோடு மாநகர் பெரியார் நகர் பகுதியில் உள்ள அமைச்சர் முகாம் அலுவலகத்தில் தமிழ்நாடு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை மதுவிலக்கு ஆயத்தீர்வை துறை அமைச்சர் சு. முத்துசாமி அவர்களை சந்தித்து வாழ்த்து பெற்றார்.இந்த நிகழ்வில் ஈரோடு மாநகர் மாவட்ட காங்கிரஸ் கட்சியின் தலைவர் ராஜேஷ் ராஜப்பா,நிர்வாகிகள் மற்றும் உறுப்பினர்கள் உள்ளனர்.

தேனி மாவட்டம் பெரியகுளம் சட்டமன்றத் தொகுதி மதசார்பற்ற முற்போக்கு கூட்டணியின் சார்பில் விடுதலை சிறுத்தைகள் கட்சியின் வேட்பாளர் சக்திவேல் என்ற ஆற்றல் அரசு வேட்பு மனுவை பெரியகுளம் வட்டாட்சியர் அலுவலகத்தில் உள்ள அதிகாரியிடம் தாக்கல் செய்தார் . பெரியகுளம் நாடாளுமன்ற உறுப்பினர் தங்கத்தமிழ் செல்வன் மற்றும் ப.ரவீந்திரநாத் உடன் இருந்தனர்.

ஈரோடு கிழக்கு சட்டமன்ற தொகுதியில், தமிழக வெற்றிக் கழகத்தின் சார்பில் வேட்பாளரான எம்.விஜய் பாலாஜி போட்டியிடுகிறார். இந்நிலையில், ஈரோடு கிழக்கு சட்டமன்ற தொகுதியில் வார்டு எண்: 37ல் உள்ள ராஜாஜிபுரம், சுப்பையன் வீதி பகுதியில் வீடு வீடாகதவெகநிர்வாகிகளுடன்சென்று விசில்சின்னத்திற்குதீவிரவாக்குசேகரிப்பில் ஈடுபட்டார்.

ஈரோடு மேற்கு சட்டமன்றத் தொகுதியின் வேட்பாளர் அமைச்சர் சு.முத்துசாமி நேற்று காலையில் பெரிய சேமூர் பகுதி 5 வது வார்டு பகுதிகளில் உதயசூரியன் சின்னத்தில் திமுக நிர்வாகிகளுடனும் ,கூட்டணி கட்சி நிர்வாகிகளுடன் சென்று வாக்கு சேகரித்தார்.

ஈரோடு மாவட்ட தேர்தல் அலுவலர்/மாவட்ட ஆட்சித்தலைவர் ச.கந்தசாமி (04.04.2026) நேற்று ஈரோடு மாவட்டம், பெருந்துறை சாலை, திண்டல், ஏழைகளின் சிறிய சகோதரிகள் முதியோர் இல்லத்தில் மாவட்ட சமூக நலத்துறையின் சார்பில் நடைபெற்ற தமிழ்நாடு சட்டமன்ற பொதுத் தேர்தல் 2026, 100 சதவீதம் வாக்குப்பதிவு குறித்த விழிப்புணர்வு நிகழ்ச்சியில் பங்கேற்றார்.

ஈரோடு மாவட்ட தேர்தல் அலுவலர்/மாவட்ட ஆட்சித்தலைவர் ச.கந்தசாமி வாக்குப்பதிவு நாளன்று வாக்குச்சாவடிகளில் பணிபுரியவுள்ள அலுவலர்களுக்கான 28.03.2026 அன்று நடத்தப்பட்ட முதல்கட்ட பயிற்சியில் கலந்துகொள்ளாதவர்களுக்கு நேற்று (04.04.2026) ஈரோடு, ரங்கம்பாளையம், கொங்கு கல்வி நிலையத்தில் பயிற்சி அளிக்கப்பட்டதை ஆய்வு மேற்கொண்டு, பயிற்சி குறித்து கலந்துரையாடினார்.

ஈரோடு மாநகர் பெரிய மாரியம்மன் வகையறா கோவில்களில் கம்பம் எடுத்தல் & மஞ்சள் நீர் விழா

ஈரோடு மாவட்டத்தில் உள்ள மிகவும் பிரபலமான திருக்கோயில்களில் ஒன்றான அருள்மிகு ஸ்ரீ பெரிய மாரியம்மன், சின்ன மாரியம்மன் ,காரை வாய்கால் மாரியம்மன் கோயில்களின் இந்த ஆண்டுக்கான குண்டம் மற்றும் தேர்த்திருவிழா மிகவும் சிறப்பாக நடைபெற்று வருகிறது.இந்த ஆண்டுக்கான திருவிழாவின் முக்கிய நிகழ்வான கம்பம் பிடுங்கும் நிகழ்ச்சி&மஞ்சள்நீராட்டுவிழாநேற்று(சனிக்கிழமை) பிற்பகல் 3 மணிக்கு நடைபெற்றது.

அருள்மிகு ஸ்ரீ பெரியமாரியம்மன் கோவிலிலிருந்து புறப்பட்டு பன்னீர்செல்வம் பார்க், மணிக்கூண்டு (மூன்று கம்பங்கள் ஒன்று சேருமிடம்) – அதன் பின்பு ஈஸ்வரன் கோயில் வீதி, காமராஜ் வீதி, மீனாட்சிசுந்தரனார்சாலை,GHரவுண்டானா,மேட்டூர் ரோடு, சுவஸ்திக் ரவுண்டானா, சத்திரோடு, எல்லைமாரியம்மன் கோவில்,நேதாஜி ரோடு,மணிக் கூண்டு, பெரியார் வீதி, மரப்பாலம் (மீண்டும்), மண்டபம் வீதி,திருமகன் ஈவேராவீதி,RKV ரோடு,நகர காவல் நிலையம்,அக்ரஹாரம் வீதி வழியாக சென்று காரை வாய்க்காலில் மூன்று கம்பங்களும் கொண்டு கொண்டுசெல்லப்பட்டுகாலிங்கராயன்வாய்க்காலில் இரவு விடப்பட்டது. இந்த மூன்று கம்பங்கள் ஊர்வலத்தையொட்டி மஞ்சள் நீராட்டு விழாவும், கம்பங்களுக்கு பக்தர்கள் உப்பு மிளகு போட்டு தங்களது நேர்த்திக் கடனை செலுத்தி உற்சாகமாக கொண்டாடினர்.

நேற்று மதியம் 12 மணிக்கே மாநகரில் பல்வேறு இடங்களில் மஞ்சள் நீராட்டு விழா தொடங்கி விட்டது ஒருவர் மீது ஒருவர் மஞ்சள் நீரை ஊற்றி மகிழ்ந்தனர். மேலும் ரோட்டில் செல்பவர்கள் மீதும் மஞ்சள் நீரை ஊற்றிஉற்சாகமாககொண்டாடினர்.இதனால்ஈரோடு மாநகரமே மஞ்சள் மாநகர ஆனது.

மதுராந்தகம் திமுக வேட்பாளர் அமுலு பொன்மலர் அச்சிறுப்பாக்கம் தெற்கு ஒன்றியத்தில் உள்ள பெரும்பேர் கண்டிகை ஓரத்தி உள்ளிட்ட கிராமங்களில் திமுக உள்ளிட்ட மதச்சார் பற்ற முற்போக்கு கூட்டணி கட்சி நிர்வாகிகளை நேரில் சந்தித்து உதயசூரியன் சின்னத்திற்கு ஆதரவு திரட்டினார்.

மதுராந்தகம் தொகுதியில் விவசாயிகளுக்கு முன்னுரிமை அளிக்கப்படும்

திமுக வேட்பாளர் அமுலு பொன்மலர் வாக்குறுதி

செங்கல்பட்டு மாவட்டம் மதுராந்தகம் சட்டமன்றத் தொகுதி மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி வேட்பாளர் அமுலு பொன்மலர் அச்சிறுப்பாக்கம் தெற்கு ஒன்றியத்தில் உள்ள பள்ளிபேட்டை ஊராட்சியில் திமுக உள்ளிட்ட கூட்டணி கட்சி நிர்வாகிகளை நேரில் சந்தித்து உதயசூரியன் சின்னத்திற்கு ஆதரவு திரட்டினார்.

அப்போது அவர்களிடம் வேட்பாளர் அமுலு பொன்மலர் பேசுகையில்,தமிழ்நாட்டில் திராவிட மாடல் அரசு மீண்டும் அமைந்தால் பெண்களுக்கு ரூ.2,000, இல்லத்தரசி என்ற புதிய திட் டத்தில் ரூ.8,000 கூப்பன். 15 லட்சம் பேருக்கு வேலை வாய்ப்பு உள்ளிட்ட மகத்தான திட்டங்களை பெற முடியும். மேலும் மதுராந்தகம் பகுதியில் விவசாயம் செழிக்க அகராது பாடுபடுவேன் . ஆகவே மீண்டும்திராவிட மாடல் ஆட்சி அமைய உதயசூரியன் சின்னத்தில் வாக்களிக்கவேண்டும்என்று பேசினார்.

ஒன்றிய செயலாளர் கண்ணன், பேரூர் செயலாளர் எழிலரசன், அவைத் தலைவர் ரத்தினவேலு,மாவட்ட கவுன்சிலர் மாலதி, கவுன்சிலர் பொற்செல்வி வெங்கடேசன், கூட்டணி கட்சி நிர்வாகிகள் ராஜேந்திரன், ஷாஜகான். உசேன். பேரறிவாளன். வேலவன், பொய்யாமொழி,பன்னீர்செல்வம், சாரதி.ராஜ சேகர், பிரகாஷ், பேக்கரி ரமேஷ், பாலாஜி, ஓபிசி மாறன், விஜயன், சரசுசெல் லப்பன், பாரதபாபு, பால சுப்பிரமணி யன், ரமணி, பன்னீர்செல்வன், சிவக்கு மார், பெருமாள், அன்பரசு, ஆனந்தக் கண்ணன்,முத்துக்குமார் காஞ்சனா பலராமன் உள்ளிட்ட திமுக கட்சி நிர்வாகிகள், கழக முன்னோடிகள் .கூட்டணி கட்சி நிர்வாகிகள் உள் ளிட்ட ஏராளமானோர் கல ந்து கொண்டனர்.

The hunt is on: Iran promises reward to 'capture or kill' American pilot after F15 shot down

After downing two American fighter jets, and thus one F-15 pilot still missing in Iranian territory as of Saturday, the Islamic Revolutionary Guard Corps (IRGC) has launched a manhunt in a southwestern region of the country. The regional governor has also promised a commendation and reward for anyone who captures or kills "forces of the hostile enemy".

One of the crew aboard the two-seater F-15E was rescued on Friday but a search was still underway for the second one, US officials said.

This is a big setback for the US as it's the first time US fighter jets have been downed in this war launched by US and Israel with strikes on Tehran on February 28 – actually the first time in 23 years that an American military plane has been shot down in any conflict at all.

Printed by, Sri Simmha Enterprises, Published by M.APROSE, onbehalf of M.APROSE, printed at THIRUVALLUR, and Published at ,1, THATTANKAADU 4TH STREET, KONGU VELAAN NAGAR, VTC PERIYASEMUR, PO: PERIA SEMUR, ERODE, TAMIL NADU - 638004 ,Editor HARI KRISHNAN M.